சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் வடக்கு ஒன்றியம் சிறுவாச்சூர் கிராமத்திலிருந்து, ஊனத்தூர் கல் லாநத்தம் சின்னசேலம் வழியாக கள்ளக்குறிச்சிக்கு புதிய வழித்தடத் தில் பஸ் இயக்க வேண்டும் என நீண்ட காலமாக அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் உத்தரவு பிறப்பித்தார். இதையடுத்து விழுப்புரம் அரசு போக்குவரத்து கழகத்தில் இருந்து, மகளிர் விடியல் பயண பஸ்சை புதிய வழித்தடத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி.,கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தே.மலையரசன் எம்.பி., பாலமுருகன், ஏ.ஏ.ஆறுமுகம், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை காந்தல் பகுதியில் உள்ள 3 வாக்குச்சாவடிகளுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் வசதிக்காக காந்தல் பென்னட் மார்க்கெட் பகுதியில் திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், அப்பகுதி நகரமன்ற உறுப்பினருமான தம்பி இஸ்மாயில் ஏற்பாட்டில், SIR படிவங்கள் பூர்த்தி செய்வதற்கான சிறப்பு அரங்கு அமைத்து பணிகள் நடந்து வருகிறது. இப்பணிகளை கழக தேர்தல் பணி செயலாளரும், அரசுக் கொறடாவுமான கா.ராமசந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குறுகிய மனப்பான்மையோடு

மோடியின் பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கிறது!

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்,எல்,ஏ, பேச்சு!

கோவை, நவ. 23–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலம் என்ற நிலைக்கு வந்து விடக்கூடாது என்ற குறுகிய மனப்பான்மையோடு மோடி அரசு, பா.ஜ.க அரசு தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கிறது என்று கோவை ஆர்ப்பாட்டத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி கூறினார்.

அவர் கூறியதாவது :

இதுகுறித்து நம்முடைய கோவையை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணித்து இருக்கிறது, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் தராமல் நிராகரித்திருக்கிறது என்பதால் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை அறிவித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிகழ்வில் இன்னொன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும், ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆளுகின்ற மாநிலங்கள் தவிர, அவருடைய தோழமை இயக்கங்கள் மாநிலங்கள் தவிர, ஆளுநர் என்ற ஒரு அதிகார மையத்தை வைத்து அவர்களுக்கு எதிராக அவர்கள் ஆளாத மாநிலங்களில் அவர்கள் அரசியல் செய்வதையும், அதிகாரம் செலுத்துவதையும் உச்சநீதிமன்றம் வரை சென்று இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய ஒரு தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கக்கூடிய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களால் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்து, இந்தியாவை வழிநடத்தக்கூடிய தகுதி படைத்த தலைவர், நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் எடுத்திருக்கக்கூடிய முன்னெடுப்பிற்கு ஒட்டுமொத்த ஆதரவுகளையும் வழங்கி இருக்கின்றார்கள்.

ஒரு அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு மட்டுமே அதிகாரம் செலுத்த முடியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நியமிக்கப்பட்ட ஆளுநர்களை வைத்து அதிகாரம் செலுத்துவதும், அரசியல் செய்வதும் இரண்டு அதிகார மையங்கள் ஒரு மாநிலத்தில் செயல்பட முடியாது என்று உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்து ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும், மோடிக்கும் அந்த தீர்ப்பை வழங்கி இருக்கின்றார்கள். இந்தியாவில் இது போன்ற ஒரு தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கக்கூடிய ஒரு ஆளுமை மிக்க முதலமைச்சர் என்று சொன்னால் அது திராவிட மாடல் அரசினுடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை இந்திய தாய் திருநாட்டு மக்களே வியந்து பார்த்து பாராட்டக்கூடிய அளவிற்கான மகத்தான ஒரு தீர்ப்பை நீதிமன்றத்தின் மூலம் பெற்றுத் தந்திருக்கின்றார்கள்,

எனவே இந்நாளில் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு கோவை மாவட்ட மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் அன்போடு தெரிவித்துக்கொண்டு, இந்த கண்டன ஆர்ப்பாட்டம் என்பது கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதிகளை கொடுக்காமல், அனுமதிகளை கொடுக்காமல் நிராகரித்திருக்கின்றன. இந்த நிராகரிக்கப்பட்ட நிகழ்வு என்பது கடந்த கால தேர்தல் காலங்களில் அந்த வாக்குறுதிகளை கொடுத்து வாக்குகளைப் பெற்ற பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி கூட இந்த நேரத்தில் மோடி அரசை, பி.ஜே.பி. அரசை பார்த்து இந்த திட்டங்களுக்கு அனுமதி மறுத்தது தவறு என்று சொல்வதற்கு கூட திராணி இல்லாத நிலையில் இந்த கூட்டணி கட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் அவர்களுடன் சேர்ந்திருக்கக்கூடிய கூட்டணி கட்சிகளும். ஆனால் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் நேற்று மாலை கோவையில், மதுரையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்தவுடன் நேற்று மாலை அறிவித்து, இன்று காலை பெருந்திரளாக பங்கேடுத்திருக்கின்ற அத்தனை நல் உள்ளங்களுக்கும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பி.ஜே.பி.அரசின் வன்மம்!

கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள், ஆசிய உட்கட்டமைப்பு முதலீடு வங்கி அதிகாரிகள் கோவைக்கு வருகை தந்து அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அந்த திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கான அனைத்து நிலைகளிலும் நடவடிக்கைகளை எடுத்தார்கள். அந்த விரிவான திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு 15 மாதங்களாக நிலுவையில் வைத்திருந்து இரண்டு தினங்களுக்கு முன்பாக அந்த விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்து அதற்கான ஒப்புதலை தர மறுத்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஆனால் பா.ஜ.க. ஆளக்கூடிய மாநிலங்களில் மெட்ரோ ரயில் திட்டம் வேண்டும் என்று திட்ட அறிக்கை தயாரித்து அனுப்பினால் ஐந்தே மாதங்களில் அனுமதி வழங்குகின்ற பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அந்த விரிவான திட்ட அறிக்கையை 15 மாதங்கள் கழித்து நிராகரித்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்கள் மீது, கோவை மக்கள் மீது, மதுரை மக்கள் மீது பி.ஜே.பி. அரசு வைத்திருக்கக்கூடிய வன்மத்தை காட்டுகிறது என்பதை நாம் இந்த நேரத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட இந்த மெட்ரோ ரயில் திட்டத்தை புறக்கணிப்பதற்கு, மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரிப்பதற்கு மக்கள் தொகையை காரணம் காட்டுகின்ற ஒன்றிய அரசு நம்முடைய கோவை மாநகராட்சியில் மட்டும் இப்பொழுது 16 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட ஒரு மாநகராட்சியாக, விரிவடைந்த மாநகராட்சியாக கோவை மாநகராட்சி விளங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால் இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் மக்கள் தொகை குறைவாக இருக்கிறது என்று காரணத்தை சொல்லி இந்த திட்டத்தை ஒன்றிய அரசு நிராகரிக்கிறது என்று சொன்னால் 10 ஆண்டுகளுக்கு முன்பாக எடுத்திருக்க வேண்டிய இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை, 10 ஆண்டுகளும் நடவடிக்கை எடுக்காமல், மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுக்காமல் காரணத்தை சொல்லுகின்ற ஒன்றிய அரசு ஆக்ராவிலே 15 லட்சம், பீகாருடைய பாட்னாவிலே 16 லட்சம், மத்திய பிரதேசம் போபாலிலே 17 லட்சம் அங்கெல்லாம் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதிகளை தந்திருக்கக்கூடிய ஒன்றிய அரசு, கோவைக்கு மட்டும் அனுமதிகளை தர மறுக்கிறது என்று சொன்னால் இது கோவை மட்டுமல்ல மதுரை மட்டுமல்ல, தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு

வழங்கியிருக்கக்கூடிய சாதனை திட்டங்களை பார்த்து ஒன்றிய அரசு மிரண்டு போயிருக்கின்றன. தமிழ்நாடு எந்த சூழ்நிலையிலும் வளர்ந்து விடக்கூடாது, தமிழ்நாடு வளர்ச்சி பெற்று விடக்கூடாது,

எந்த திட்டத்தையும் கொடுக்காத ஒன்றிய அரசு பி.ஜே.பி. அரசு தமிழ்நாட்டிற்கு வருகின்ற பொழுதெல்லாம், அது பிரதமராக இருந்தாலும் சரி, ஒன்றிய அமைச்சர்களாக இருந்தாலும் சரி ஒன்று திருக்குறளை சொல்வார்கள், மற்றொன்று தமிழிலே பேச ஆரம்பிப்பார்கள், தமிழ்நாட்டைப் பற்றி புகழ்ந்து பேசுவதை போல அந்த இடத்திலே ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவார்கள், ஆனால் தமிழருடைய பாரம்பரியத்தை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த நிலையில் தான் ஒன்றிய அரசு, பி.ஜே.பி. அரசு அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, அப்படிப்பட்ட ஒன்றிய அரசு பி.ஜே.பி. அரசிற்கு இன்று சிம்ம சொப்பனமாக இருக்கக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படியாக இந்த மெட்ரோ ரயில் திட்டத்தினுடைய புறக்கணிப்புகள் மட்டுமல்ல, சென்னையில் இருக்கக்கூடிய மெட்ரோ ரயில் இரண்டாம் திட்டத்திற்கு நிதிகளை ஒன்றிய அரசு தர மறுத்த பொழுதும் கூட தமிழ்நாடு அரசினுடைய நிதிகளைக் கொண்டு அந்த திட்டத்தை செயல்படுத்தியவர் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள். நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் முன்னெடுத்திருக்கின்ற இந்த மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காமல், அதற்கான நிதிகளை தர மனமில்லாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு வஞ்சனையை செய்து கொண்டிருக்கின்றன. கல்வி நிதி தர மறுப்பு, 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி கொடுக்க மறுப்பு, நம்முடைய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு ஒன்றிய அரசு மறுப்பு, ஆனால் நம்முடைய வரி மட்டும் அவர்களுக்கு தேவை, நாம் ஒரு ரூபாய் வரி செலுத்தினால் நமக்கு திருப்பி தருவது வெறும் 29 பைசா, ஆனால் ஒரு ரூபாய் வரி செலுத்தக்கூடிய மாநிலங்களுக்கு ஏழு ரூபாய் வரை பி.ஜே.பி. ஆளக்கூடிய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி தருகிறது என்று சொன்னால் சில தினங்களுக்கு முன்பாக இங்கே வந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பத்திரிக்கையாளர்களை சந்திக்கின்ற பொழுது அந்த கட்சியினுடைய கூட்டத்திலே கூட அவர்கள் சொல்கிறார் அனைத்து மாநிலங்களுக்கும் நாங்கள் சரியான நிதிகளை தருகிறோம் என்று சொல்கின்றார்கள், ஒரு பொய்யான, உண்மைக்கு மாறான கருத்தை இங்கு பேசுகின்ற பொழுது சுட்டிக்காட்டினார்

உயர்மட்ட பாலம்!

அவிநாசி சாலையில் கம்பீரமாக தமிழ்நாட்டிலேயே மிக நீளமான உயர்மட்ட பாலத்தை கட்டி அதற்கு ஜிடி நாயுடு பெயரை வைத்து திறந்து வைத்தவர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

பெரியார் நூலகம்!

போட்டி தேர்வுக்கு தயாராக கூடியவர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு பெரியார் நூலகம் மிக பிரம்மாண்டமாக தயாராகிக் கொண்டிருக்கின்றன ஜனவரியில் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்க இருக்கின்றார்கள்.

செம்மொழி பூங்கா

செம்மொழி பூங்கா மிக சிறப்பாக 214 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தயாராகிக் கொண்டிருக்கிறது, வருகின்ற 25ம் தேதி நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் திறந்து வைக்க இருக்கின்றார்கள்.

பல ஆண்டு கால கோரிக்கை!

எங்களுடைய இல்லத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி நாங்கள் தங்க நகை செய்கின்றோம், எங்களுக்கு ஒரு தொழில் வளாகம் வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த கால ஆட்சியில் இருந்தவர்கள் புறக்கணித்தார்கள். நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் அந்த பகுதிகளுக்கே நேரில் சென்று அவர்களுடைய கோரிக்கைகளை கேட்டு தங்க நகை பூங்கா அமைப்பதற்கான அறிவிப்பை கொடுத்து, திட்ட மதிப்பீடை தயார் செய்து அதற்கான பணிகளையும் தொடங்கி வைத்திருக்கிறார்.

ஐடி பார்க் தகவல்!

தொழில்நுட்பத்தினுடைய தலைமை இடமாக திகழக்கூடிய கோவைக்கு இன்று அந்த தகவல் தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்கான திட்டங்களையும் தந்திருப்பவர் நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். சாலை வசதிகள் வேண்டுமா 200 கோடி ரூபாய் சிறப்பு நிதி, பாதாள சாக்கடை திட்டம் வேண்டுமா அதற்கு சிறப்பு நிதிகள், இப்படி தொடர்ச்சியாக அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை தந்திருப்பவர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள், அது மட்டுமா கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கக்கூடிய மகத்தான திட்டம், பெண்கள் பயணம், நான் முதல்வன், தமிழ் புதல்வன், புதுமை பெண், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் இப்படி அடுக்கடுக்கான திட்டங்கள் சொல்லிக் கொண்டே போகலாம் அந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களை எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்திருப்பவர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

ஒன்றிய அரசு முதலமைச்சர் எடுத்திருக்கக்கூடிய முன்னெடுப்புகளை தடுத்து நிறுத்தினாலும், தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய முதலமைச்சருக்கு துணை நிற்கின்றார்கள். அதில் பெரும்பான்மையாக கோவை மக்கள் துணை நிற்கின்றார்கள். வரக்கூடிய 2026ல் கோவையை புறக்கணித்த, மதுரையை புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கும் அவர்களுக்கு முட்டு கொடுக்கின்ற அடிமை அ.தி.மு.கவிற்கும் சரியான பாடத்தை புகட்டி 2026ல் கோவையில் பத்து தொகுதிகளும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையிலே நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலே வென்றது என்ற சரித்திர சாதனையை உருவாக்கிட வேண்டும்.

மக்கள் மீது அன்பு பாசம் வைத்திருக்கக்கூடிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள், துணை முதலமைச்சராக நம்முடைய இளைஞர் அணி செயலாளர் கோவைக்கு ஒரு சர்வதேச அளவிலான கிரிக்கெட் மைதானம் வேண்டும் என்று சொன்னவுடன் அந்த கிரிக்கெட் மைதானத்தை கொடுத்து அதற்கான பணிகளை முன்னெடுத்திருப்பவர் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள். ஒரு ஹாக்கி மைதானம் சர்வதேச அளவிலே அமைக்கப்பட்டு விரைவில் அதையும் திறந்து வைக்க இருக்கின்றார்கள். இப்படி விளையாட்டாக இருந்தாலும், தொழில் வளர்ச்சிகளாக இருந்தாலும், அடிப்படை வசதிகளாக இருந்தாலும் நிறைவேற்றி தருகின்ற அரசு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அரசு, நம்முடைய முதலமைச்சர் தளபதி என்பதை கோவை மாவட்ட மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றார்கள்.

நாம் செலுத்துகின்ற வரியை பெறுகின்ற ஒன்றிய அரசு, நாம் கோவைக்கு செல்கின்றோமே, அங்கு மக்கள் கோரிக்கை வைத்து தேர்தல் நேரத்தில் நாம் செயல்படுத்துவோம் என்று சொன்னோமே, நம்முடைய திட்டத்தை செயல்படுத்துவோம் என்பதை சொல்லி வாக்குகளை கேட்டு அந்த வாக்குகளைப் பெற்றார்களே அவர்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்று கூச்சமே இல்லாமல் இங்கு வந்து ஏதோ இப்ப புதுசா இயற்கை வேளாண்மை வளர்ப்பதை போல ஒரு தோற்றத்தை உருவாக்குகின்றார்கள்.

ஏற்கனவே தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் இந்தியாவில் முதலிடம் என்ற அளவிற்கு அதை வழிநடத்தக் கூடிய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

கோவைக்கான திட்டங்களை தருவார்கள். இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம், தமிழ்நாட்டில் கோவை மாவட்டம் வளர்ச்சியில் முதலிடம் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து திட்டங்களை தந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி கூறினார்.

எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தை – மாவட்டப் பிரதிநிதி

எம்.ரமேஷ் திருவுருவப் படம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து அஞ்சலி!

தயாநிதி மாறன் எம்.பி. - மேயர் திருமதி. பிரியா ராஜன் பங்கேற்பு!

சென்னை, நவ.23-

எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர். விஜய்யின் தந்தையும் மாவட்டக் கழகப் பிரதிநிதியுமான மறைந்த எம்.ரமேஷ் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு நிகழ்வு இன்று (23/11/2025) மாலை 6.30 மணியளவில் சேத்துப்பட்டு, மங்களபுரம் 11வது தெரு, எண்: 9/5ல் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்தை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், பெருநகர சென்னை வளர்ச்சி குழும தலைவரும் மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகர் மேயர் திருமதி. பிரியா ராஜன், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் மற்றும் மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ. வேலு எம்.சி., 108வது "அ" வட்ட செயலாளர் எல். சுந்தர்ராஜன் எம்.சி., 108வது வட்ட செயலாளர் வான்மதி கதிரவன், 61வது வட்ட செயலாளர் டால்பின் எஸ். ஹரிகிருஷ்ணன், 61வது "அ" வட்ட செயலாளர் இ.மொய்தின், 58வது வட்ட செயலாளர் வி.விஜய குமார், 58வது "அ" வட்ட செயலாளர் ஆர். பாபு மற்றும் மாநில, இணை, துணை நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சிறப்பு செயற்குழு கூட்டம் முல்லைநகர் கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் திருமகல் வடக்கு ஒன்றியம் ஆலத்தூர் ஊராட்சி அருண்மொழிதேவன் கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் 21 குடும்பத்தினர் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் நாகரத்தினம், மீனவர் அணி செல்வம்நாட்டார், ஆலத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கணேசன், திருமருகல் வடக்கு ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எம். சுபாஷ், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் என். செல்வராஜ், வாக்குச்சாவடி குழு உறுப்பினர் சுகன்யா ஆகியோர் உள்ளனர்.